# REVISION WORKSHEET

# இலக்கணம்

## இயல் -- 2

## தொகைநிலைத் தொடர்கள்

**I. சான்று தருக.**

1. சொற்றொடர்
   (அ) திருந்தினான்
   (ஆ) உணவு அருந்தினான்
   (இ) பாம்பு
2. அன்மொழித்தொகை
   (அ) கருங்குழல் வந்தாள்
   (ஆ) பவளவாய்
   (இ) கண்ணன் வந்தான்
3. உம்மைத்தொகை
   (அ) கொடியிடை
   (ஆ) தேன்மொழி பேசினாள்
   (இ) இரவு பகல்
4. உவமைத்தொகை
   (அ) செங்கடல்
   (ஆ) தாமரைமுகம்
   (இ) உயிர்மெய்
5. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
   (அ) இனிய காட்சி
   (ஆ) உண்ணச் சென்றான்
   (இ) நண்பா கேள்
6. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
   (அ) பாய்புலி
   (ஆ) தேர்பாகன்

(இ) இன்தமிழ்

7. தொகைநிலைத்தொடர்

(அ) இடிசுவர்

(ஆ) பாடிய கந்தன்

(இ) கந்தா! வா!

8. பண்புத்தொகை

(அ) பொற்றொடி

(ஆ) முத்தமிழ்

(இ) சுடுசோறு

9. வேற்றுமைத்தொகை

(அ) வாழ்மனை

(ஆ) சதுரப்பலகை

(இ) பாடம் படித்தான்

10. அன்மொழித்தொகை

(அ) முறுக்கு மீசை வந்தார்

(ஆ) செங்காந்தாள்

(இ) பொங்குபானை

## II. <u>இலக்கணக்குறிப்புத் தருக.</u>

11. எழுகதிர்

(அ) வினைத்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) வேற்றுமைத்தொகை

12. தலைவலி மருந்து

(அ) வினைத்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) வேற்றுமைத்தொகை

13. மார்கழித் திங்கள்

(அ) வினைத்தொகை

(ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(இ) பண்புத்தொகை

14. வெண்டாமரை

(அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) அன்மொழித்தொகை

15. காலை மாலை

(அ) உம்மைத்தொகை

(ஆ) உவமைத்தொகை

(இ) பண்புத்தொகை

16. இந்தியநாடு, சாரைப்பாம்பு

(அ) வினைத்தொகை

(ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(இ) வேற்றுமைத்தொகை

17. தேர்ப்பாகன், பால் குடம்

(அ) வினைத்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

18. கயல்விழி, மலர்ப்பாதம்

(அ) வினைத்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) உவமைத்தொகை

19. சிவப்பு சட்டை பேசினார்

(அ) வினைத்தொகை

(ஆ) அன்மொழித் தொகை

(இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

20. முத்துப் போன்ற பல்

(அ) வினைத்தொகை

(ஆ) விரி உவமை

(இ) வேற்றுமைத்தொகை

## III. <u>கோடிட்ட இடங்களை நிரப்புக.</u>

21. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது --------------- எனப்படும்

(அ) சொற்றொடர் (ஆ) தொகை (இ) அளபெடை

22. பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்குமானால் அதனை -------------- என்று கூறுவர்.

(அ) தொகைநிலைத்தொடர்

(ஆ) தொகாநிலைத்தொடர்

(இ) தொழிற்பெயர்

23. தொகைநிலைத் தொடர் -------------------- வகைப்படும்.

(அ) ஆறு

(ஆ) எட்டு

(இ) ஐந்து

24. ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ,ஆல்,கு,இன்,அது கண்) ஆகியவற்றுள் ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்துவது ------------------- எனப்படும்.

(அ) வினைத்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) வேற்றுமைத்தொகை

25. ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது உருபும் பயனும் ------------- எனப்படும்.

(அ) உம்மைத்தொகை

(ஆ) அன்மொழித்தொகை

(இ) உருபும் பயனும் உடன்தொக்கதொகை

26. காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது ----------------- எனப்படும்.

(அ) உம்மைத்தொகை

(ஆ) உவமைத்தொகை

(இ) வினைத்தொகை

27. வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச்சொல் அமைந்த சொற்றொடர்களிலே ----------------- அமையும்.

(அ) உம்மைத்தொகை

(ஆ) வினைத்தொகை

(இ) உவமைத்தொகை

28. நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப் பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் “மை” என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது -------------------- எனப்படும்.

(அ) உம்மைப்தொகை

(ஆ) பண்புத்தொகை

(இ) உடன்தொக்கதொகை

29. சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ‘ஆகிய’ என்னும் பண்பு உருபு தொக்கி வருவது ---------------------- ஆகும்.

(அ) அன்மொழித்தொகை

(ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(இ) உருபும் பயனும் உடன்தொக்கதொகை

30. உவமைக்கும் பொருளுக்கும் (உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது ------------------ எனப்படும்.

(அ) அன்மொழித்தொகை

(ஆ) உவமைத்தொகை

(இ) உருபும் பயனும் உடன்தொக்கதொகை

31. வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்கள் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது ----------------------- ஆகும்.

(அ) வேற்றுமைத்தொகை

(ஆ) உவமைத்தொகை

(இ) அன்மொழித்தொகை

32. இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது ------------------ ஆகும்.

(அ) வேற்றுமைத்தொகை

(ஆ) உவமைத்தொகை

(இ) உம்மைத்தொகை

33. காலம் கரைந்த ------------------ வினைத்தொகை ஆகும்.

(அ) வினையெச்சம்

(ஆ) பெயரெச்சம்

(இ) வினைமுற்று

34. குடிநீர் என்பது ----------------------------

(அ) உரிச்சொல் தொடர்

(ஆ) வினைத்தொகை

(இ) உம்மைத்தொகை

## IV. <u>கூறியவாறு செய்க .</u>

35. பவளம் போன்ற வாய் (உவமைத்தொகையாக்குக.)

(அ) பவளவாய்

(ஆ) வாய் பவளம்

(இ) வாயாகிய பவளம்

36. இடிக்கின்ற சுவர் (வினைத் தொகையாக்குக.)

(அ) சுவர் இடிந்தது

(ஆ) இடிசுவர்

(இ) இடிக்கும் சுவர்

37. காற்று -- (இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்குக.)

(அ) தென்றல் காற்று

(ஆ) வீசிய காற்று

(இ) காற்று வீசும்

38. மலர் -- (இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்கு)

(அ) முல்லைமலர்

(ஆ) முல்லையாகிய மலர்

(இ) மலர்ந்த மலர்

39. ஊறுகின்ற காய் (வினைத் தொகையாக்கு)

(அ) ஊறுகாய்

(ஆ) ஊறும் காய்

(இ) காய் ஊறும்

40. மொழி– (குணப் பண்புப்தொகையாக்குக.)

(அ) இன்மொழி

(ஆ) இனிய மொழி

(இ) இனிக்கும் மொழி

41. சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார் (அன்மொழித் தொகையாக்குக.)

(அ) சிவப்புச் சட்டை பேசினார்

(ஆ) சிவப்பான சட்டை அணிந்தவர் பேசினார்

(இ) சிவப்புச் சட்டை போட்டவர் பேசினார்

42. தேன் போன்ற மொழி (உவமைத் தொகையாக்குக)

(அ) தேன்மொழி

(ஆ) மொழித்தேன்

(இ) தேனாகிய மொழி

43. தாய்சேய் (தொகை விரியாக்குக)

(அ) தாயும் சேயும்

(ஆ) சேய்தாய்

(இ) தாயோ! சேயோ!

44. காந்தாள் (நிறப் பண்புத்தொகையாக்குக)

(அ) செங்காந்தாள்

(ஆ) மலர் காந்தள்

(இ) காந்தாள் மலர்

45. மரம் (இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்கு)

(அ) மரப்பலகை

(ஆ) பனைமரம்

(இ) பழுத்த மரம்

46. காயும் கறியும் (உம்மைத் தொகையாக்குக)

(அ) காய்கறி



6 / 7

(ஆ) காய்கின்ற கறி

(இ) காயும் கறி

47. மஞ்சளது பொடி -- (தொகையாக்குக)

(அ) மஞ்சட்பொடி

(ஆ) பொடிமஞ்சள்

(இ) மஞ்சளுடைய பொடி

48. வேந்தர் -- (அளவு பண்புத்தொகையாக்குக)

(அ) வாள்வேந்தன்

(ஆ) பெருவேந்தன்

(இ) மூவேந்தர்

49. கோவைக்குச் சென்றார்– (வேற்றுமைத்தொகையாக்குக)

(அ) கோவை சென்றார்

(ஆ) சென்றார் கோவை

(இ) இராமன் கோவைக்குச் சென்றார்

50. தேரை ஓட்டும் பாகன் -- (உருபும் பயனும் உடன்தொக்க தொகையாக்குக)

(அ) தேரைப் பாகன்

(ஆ) தேருக்குப் பாகன்

(இ) பாகன் ஓட்டும் தேர்

-----------------------------------------------------